

# ஜெபத்திற்காக விடப்படும் ஓர் அழைப்பு 3

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து




நீ தனித்துப் போகும்படிக்கு, ஏதோ ஒன்று உனக்குள்
இருக்கிறது என்பதை நீ அறிவாய். அநேக ஜனங்கள்,
அவர்கள் சபைக்கு வருவது வரைக்கும்
ஜெபிப்பதேயில்லை; அநேக ஜனங்கள்,
ஜெபிக்கிறதற்கான இடம் சபை மட்டுமே என்று
எண்ணுகிறார்கள். ஆனால், மனிதர்கள், தங்கள்
பரிசுத்தமுள்ள கரங்களை உயர்த்தினவர்களாய்
எல்லா இடங்களிலும் ஜெபிக்க வேண்டும் என்று
பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
செய்தி: குருடனான
பர்திமேயு, 57-0301,
பத்தி எண் E-9

இப்போது, இந்த முழு உலகத்திலும் உள்ளதிலேயே வலிமை வாய்ந்த ஆயுதத்தை அவர் நமக்குத் தந்துள்ளார். அது ஜெபம் என்னும் ஆயுதமே. ஜெபம் என்பது, காரியங்களை மாற்றிப் போடுவதாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக தன் கால்களை முடக்கி முழங்காலில் நிற்கும் போது, அது எத்தகைய வல்லமை என்பதைக் கிறிஸ்தவர்கள் உணர்வதில்லை.



*சகோ.வில்லியம் பிரன்ஹாம்*

செய்தி: என் தூதனானவர் உனக்கு முன்பாக போவார், 53-0213, பத்தி எண் E-7


இசையின் மூலமாக தேவன் சுகமளிக்கிறார். அன்பின் மூலமாக தேவன் சுகமளிக்கிறார். பாருங்கள்? மருந்துகள் மூலமாகத் தேவன் சுகமளிக்கிறார். ஜெபத்தின் மூலமாக தேவன் சுகமளிக்கிறார். சுகமளிப்பதற்குத் தேவனிடத்தில் அநேக வழிகள் உண்டு. உனக்கு எது தேவையோ அதைச் சார்ந்துள்ளது.
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
செய்தி:
நோக்கிப் பார்,
63-0428, பத்தி
எண் 6, 7


நாம் தேவனிடத்தில் எதையாவது கேட்டால், ஞாபகம் கொள்ளுங்கள், தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார். அதை அவருடைய வேளையில் செய்கிறார். எவ்வழி சிறந்ததோ, நமக்காக சரியாக கிரியை செய்கிறார்.



சகோ.வில்லியம்
பிரன்ஹாம்

செய்தி: புத்திர
சுவிகாரம் #3, 60-0522
M, பத்தி எண் 16


ஓ, ஒரு செய்தியைக் கேட்பதிலோ அல்லது மற்றொன்றிலோ, நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், வெளியே செல்ல விரும்பி, அவருடன் ஜெபத்தில் நேரத்தை செலவிடுவது, அவருடன் தொடர்பு கொண்டு ஐக்கியம் கொள்வது, அவரை நினைவுகூருவது என்பதே சந்தோஷத்தைக் கொடுக்கிறது...
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
செய்தி:
ஆண்டவரை நினைவு கூருதல், 63-0122, பத்தி எண் 236


தானியேல் ஜெபித்தார். ஆனால் தூதன், 'அவர் ஜெபம் ஏறெடுத்து இருபத்தியொரு நாட்கள் ஆன பிறகும், அந்தத் தூதன் இவரைச் சந்திக்க கூடாத அளவிற்கு அவருக்கு அங்கே பிரச்சனை உண்டாயிருந்தது' என்று கூறினார். ஆகவே எதிலும் அவசரம் காட்டாதீர்கள்; விசுவாசிக்க மட்டும் செய்யுங்கள்; விசுவாசமுடையவர்களாயிருங்கள்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
செய்தி: தேவதூதன், 51-0720, பத்தி எண் E-23


செய்தி:
அவருடைய
சத்தத்திற்கு
செவிகொடுங்கள்,
58-1005 M, பத்தி
எண் E-45
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு சென்றடையும்போது,
அந்த இரகசிய அறைக்குள் செல்லுங்கள், கதவை
மூடுங்கள். கீழே முழங்காற்படியிடுங்கள். எல்லா
இடங்களிலும், எல்லா வகையான சத்தத்தை நீங்கள்
கேட்டுள்ளீர்கள். ஆனால் அந்தச் சத்தங்கள் எல்லாம்
அடங்கும் மட்டுமாய், முழங்காற்படியிட்டு அங்கேயே
தரித்திருங்கள். துள்ளிக்குதிக்கத் தொடங்குவீர்கள்.
அது உங்களை மாற்றிப்போடும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: விடாமுயற்சி , 62-0520, பத்தி எண் E-29

**...ஈசாய் (Jesse) (தாவீதின் தகப்பன் – தமிழாக்கியோன்) என்பவன் தேவனுடைய மகத்தான மனிதன். படுக்கைக்கு செல்வதற்கு முன்பாக, எல்லாப் பையன்களையும், தன்னைச் சுற்றிலும் கூடிவரப்பண்ணி, குடும்ப ஜெபத்தை ஏறெடுத்திருப்பான் என்பதில் சந்தேகமில்லை; ஒருவேளை புஸ்தகச் சுருளை வாசித்திருப்பான்; மகத்தான யேகோவாவைப் பற்றிப் பேசியிருப்பான்...**

மற்ற உலகக் காரியங்களிலிருந்து உன்னை அடைத்துக் கொள், தேவனோடு தனித்திரு. அவ்வாறு செய்வதை நீ விரும்புவதற்கு காரணம், ஏனென்றால் முதல் ஜோடிகள் உலகத்தில் பிரவேசிக்கும் போது, ஆதாமும், ஏவாளும் அதைத்தான் செய்தார்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: ஐக்கியம், 56-0212, பத்தி எண் E-24


செய்தி:
முற்றிலுமான
விடுதலை, 59-
0712, பத்தி
எண் 53
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி நீங்கள் கட்டளையைப் பெற்றுள்ளீர்கள். ஒருவருக்கு விரோதமாக ஒருவர் பேசும்படி கூறவில்லை, ஆனால் ஒருவரை ஒருவர் நீங்கள் நேசிக்க வேண்டும்.

# ஜெபத்திற்காக விடப்படும் ஓர் அழைப்பு

3

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

